செ.வெ.எண்: 36 நாள்: 28.06.2020

# பத்திரிக்கைச் செய்தி

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் சார்பில் கொரோனா நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் ஒரு அங்கமாக **இ-சஞ்சீவனி ஓபிடி** கட்டணமில்லா காணொலி மருத்துவ ஆலோசனைத் திட்டம் இணைய வழியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பொதுமக்கள் மருத்துவரின் ஆலோசனைகளை இணையதளத்தின் வழியாக பெறுவதற்கு கூகுள் குரோம் அல்லது மோஸில்லா பையர் பாக்ஸ் வாயிலாக https://esanjeevaniopd.in என்ற இணையதளத்தில் தொடர்பு கொள்ளலாம். பதிவு உள்ளீட்டில் அலைபேசி எண்ணை தெரிவிக்கவும். தாங்கள் அலைபேசிக்கு வரும் ஒரு முறை கடவு எண்ணை (OTP) உள்ளீட்டில் பயன்படுத்தவும். நோயாளி பதிவுக்கான விவரங்களை தெரிவிக்கவும். தங்களது அலைபேசி எண்ணிற்கு அனுப்பப்பட்ட நோயாளி சீட்டு எண்ணை (Token No) பயன்படுத்தி நோயாளி உள்ளீடு வாயிலாக உள்ளே நுழையவும். காத்திருப்பு அறை விண்டோவில் (Call Now) என்று வரும்போது அந்த உள்ளீட்டை அழுத்தவும். மருத்துவரிடம் காணொலி மூலமாக தங்களது குறைகளை தெரிவித்து ஆலோசனை பெறலாம். மருத்துவரின் மின்னணு பரிந்துரை சீட்டை (eprescription) பதிவிறக்கம் செய்து, அருகிலுள்ள மருத்துவ / மருந்து நிலையங்களில் மருந்துகளை பெற்றுக்கொள்ளவும்.

மேலும், கர்ப்பிணிதாய்மார்கள் கர்ப காலத்தில் தங்களுக்கு ஏற்படும் சந்தேககங்களை வீட்டிலிருந்தே இ-சஞ்சீவனி ஓபிடி காணொலி மருத்துவ சேவையின் மூலம் மருத்துவர்களிடம் ஆலோசனை செய்துக்கொள்ளலாம். கர்ப காலத்தில் என்ன மாத்திரைகள் உட்கொள்ளவேண்டும், என்ன சத்தான உணவு உட்கொள்ள வேண்டும் என மருத்துவரிடம் கேட்டுக்கொள்ளலாம். தேவைப்பட்டால் மட்டுமே அருகிலுள்ள மருத்துவ நிலையங்களில் நேரில் சென்று மருத்துவர்களிடம் ஆலோசனை பெற பரிந்துரைக்கப்படுவீர்கள். இல்லையென்றால் வீட்டிலிருந்த படியே தங்களது சிறிய பிரச்சனைகளுக்கான உரிய ஆலோசனைகளையும் மருத்துவ பரிந்துரைகளையும் இந்த சேவையிலேயே பெற முடியும். இந்த சேவையினை கர்ப்பிணித்தாய்மார்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இச்சேவையினை அனைத்து தினங்களிலும் காலை 10.00 முதல் மாலை 03.00 மணி வரை ஆலோசனைகள் வழங்கப்படும். எனவே, அரியலூர் மாவட்டத்திலுள்ள பொதுமக்கள் அனைவரும் இச்சேவையினை பயன்படுத்திக்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**